ஜனவரி 2020

விண்மீன் .காம்

# முதலாவது வார நடப்பு நிகழ்வுகள்

01 ஜனவரி – 07 ஜனவரி

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.அரசாங்கம், அண்மையில், மத்திய கருவி அடையாள பதிவு தளத்தை (Central Equipment Identify Register Portal) அறிமுகப்படுத்தியது. எந்தத் துறையின்கீழ் இது இயங்குகிறது?**

அ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை

**ஆ. தொலைத்தொடர்புத் துறை ☑**

இ. உயிரி-தொழில்நுட்பத் துறை

ஈ. பொதுநிறுவனத்துறை




❖ அலைபேசிகளைத் தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் இந்திய அரசு, மத்திய கருவி அடையாள பதிவு தளத்தைத் தொடங்கியது. இது தடுப்புப்பட்டியலில் உள்ள அலைபேசிகளின் சர்வதேச அலைபேசி அடையாள எண்ணின் (IMEI) தரவுத்தளத்தைக் கொண்டுள்ளது.

**2.தனு யாத்ரா கொண்டாடப்படும் மாநிலம் எது?**

**அ. ஒடிசா ☑**

ஆ. தெலுங்கானா

இ. ஜார்கண்ட்

ஈ. மத்தியப் பிரதேசம்



❖ 11 நாள் நடைபெறும் புகழ்பெற்ற தனு யாத்ரா என்பது, ஆண்டுதோறும் மேற்கு ஒடிசா மாநிலத்தின் பர்கர் நகரத்திலும் அதைச்சுற்றியும் நடத்தப்படுகிற ஒரு திறந்தவெளி நாடக நிகழ்ச்சியாகும். இது கிருஷ்ணர் மற்றும் அவரது மாமா கம்சனின் புராணக்கதையை அடிப்படையாகக்கொண்ட நாடக நிகழ்வாகும். கடந்த 2014ஆம் ஆண்டு நவம்பரில், இதற்கு, தேசிய திருவிழா என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.

**3.உலகின் மிகவயதான காண்டாமிருகம் என நம்பப்படும் 'Fausta' என்ற பெண் கருப்பு காண்டாமிருகம், சமீபத்தில், தான்சானிய காப்புப்பகுதியில் இறந்தது. கருப்பு காண்டாமிருகங்களின் IUCN நிலை என்ன?**

அ. அழிந்துவிடும் என்ற அச்சுறுநிலையற்றவை

ஆ. அருகிவருபவை

**இ. அச்சுறுத்தலுக்கு உள்ளானவை ☑**

ஈ. அருகும் தருவாயில் உள்ளவை



❖ "கருப்பு மூக்குக்கொம்பன்" எனவும் அழைக்கப்படும் இவ்வினங்கள் 'கருப்பு' என அழைக்கப்பட்டாலும் பழுப்பு மற்றும் சாம்பல் நிறங்களிலேயே உள்ளன. கென்யா, தான்சானியா, நமீபியா, தென்னாப்பிரிக்கா மற்றும் ஜிம்பாப்வே உள்ளிட்ட தெற்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் இவை காணப்படுகின்றன.

❖ தென்மேற்குப் பகுதியில் வாழும் கருப்பு காண்டாமிருகத்தின் நிலை பாதுகாப்பற்றவை (vulnerable) என வகைப்படுத்தப்பட்டிருந்தாலும், அதன் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்க (IUCN) நிலையானது, அச்சுறுத்தலுக்கு உள்ளானவை (critically endangered) என்றே உள்ளது.

**4. 2020ஆம் ஆண்டில் வரும் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளிலும் 'No Vehicle Day – வண்டியற்ற நாள்' எனக் கடைப்பிடிக்கவுள்ள மாநிலம் எது?**

அ. கேரளா

ஆ. குஜராத்

இ. பஞ்சாப்

**ஈ இராஜஸ்தான் ☑**



❖ சாலை பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், வாகன மாசுபாட்டைக் குறைப்பதற்கும், இராஜஸ்தான் மாநிலப் போக்குவரத்துத்துறையானது 2020ஆம் ஆண்டில் வரும் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளிலும், "வண்டிகளற்ற நாள்" என அனுசரிக்க முடிவுசெய்துள்ளது. அக்குறிப்பிட்டநாளின்போது, போக்குவரத்துத்துறைசார்ந்த பணியாளர்கள் அனைவரும் பாதசாரிகளாகவோ, மிதிவண்டியில் பயணப்பட்டோ / பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தியோ தங்களது அலுவலகத்தை அடைவார்கள்.

**5.நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் முதல் கொடியேற்றியதன் 76ஆவது ஆண்டு நினைவுநாளை நினைவு கூரும் நிகழ்வு நடைபெற்ற இடம் எது?**

அ. காஷ்மீர்

ஆ. ஜம்மு

இ. லடாக்

**ஈ. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் ☑**



❖ நேதாஜி சுபாஷ் சந்திரபோஸால் முதல் கொடியேற்றப்பட்டு 76 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி போர்ட் பிளேரில் விழா ஒன்று நடைபெற்றது. சுபாஷ் மேளா கமிட்டியால் ஸ்வராஜ்தீப் ஈருருளி பேரணி ஏற்பாடுசெய்யப்பட்டது. கலாசார நிகழ்ச்சிகளும் அப்போது நடத்தப்பட்டன.

**6.எந்த மாநிலம் தனது முதல் பனிச்சிறுத்தை கணக்கெடுப்பை நடத்தவுள்ளது?**

**அ. உத்தரகண்ட் ☑**

ஆ. ஹிமாச்சலபிரதேசம்

இ. ஹரியானா

ஈ. பஞ்சாப்



❖ குளிர்காலம் முடிந்ததும் உத்தரகண்ட் மாநிலம் தனது முதல் பனிச்சிறுத்தை கணக்கெடுப்பு நடத்த உள்ளது. உத்தரகண்ட் மாநிலத்தில் எண்பதுக்கும் மேற்பட்ட பனிச்சிறுத்தைகள் வசித்துவருவதாக நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர். இருப்பினும், அதன் எண்ணிக்கை கணக்கெடுப்பு இன்னும் ஒருமுறை கூட அங்கு நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**7.பணியமர்த்துநர்களுக்கும் பணியாளர்களுக்கும் விரைவான தீர்வை வழங்கும், 'சந்துஷ்த்' தளத்தை தொடங்கவுள்ள அமைச்சகம் எது?**

அ. வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஆ. நிதி அமைச்சகம்

**இ. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

ஈ. மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

❖ தொழிலாளர் சட்டங்களை திறம்பட செயல்படுத்துவதை உறுதிசெய்வதற்காக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமானது அடுத்தமாதம், 'Santusht' வலைத்தளத்தை தொடங்கவுள்ளது. முறையான துறையில் பணிபுரிபவர்களுக்கு ஓய்வூதிய நிதியமைப்பு, EPFO மற்றும் சுகாதாரக் காப்பீடு மற்றும் சேவை வழங்குநரான ESIC வழங்கும் சேவைகளையும் இது ஆராயும்.

**8.தேசிய உட்கட்டமைப்பு திட்டங்களை உருவாக்குவதற்காக அண்மையில் அமைக்கப்பட்ட பணிக் குழுவிற்கு தலைமைதாங்கவுள்ளவர் யார்?**



அ. அமைச்சரவைச் செயலாளர்

**ஆ. பொருளாதார விவகாரச் செயலாளர் ☑**

இ. வருவாய்ச் செயலாளர்

ஈ. நிதிச் செயலாளர்

❖ மத்திய அரசு, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களுக்காக அடுத்த ஐந்தாண்டுகளில் ₹102.5 இலட்சம் கோடியை செலவிடவுள்ளதாக மத்திய நிதியமைச்சர் அறிவித்துள்ளார். 2019–2020 – 2024–25 வரை தேசிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான செயல் திட்டத்தை உருவாக்குவதற்காக, நிதியமைச்சகம் ஒரு பணிக்குழுவை அமைத்துள்ளது. இதற்கு பொருளாதார விவகாரச் செயலாளர் தலைமைதாங்குவார்.

**9.அண்மையில் 'ஓட்டர்ஸ்' படைப்பிரிவில் சேர்க்கப்பட்ட டார்னியர் விமானம், எந்த வகையைச் சேர்ந்தது?**



அ. உளவு விமானம்


**ஆ. ஒளி பயன்பாட்டு விமானம் ☑**

இ. கண்காணிப்பு விமானம்

ஈ. உத்திமுறை விமானம்

❖ ஒளி பயன்பாட்டு விமானமான டார்னியர், அண்மையில், பாலம் வான்படை நிலையத்தில் நடந்த ஒரு விழாவின்போது எண்.41 'ஓட்டர்ஸ்' படைப்பிரிவில் சேர்க்கப்பட்டது. டார்னியர்–228 விமானம் ஒரு பன்னோக்கு, எரிபொருள் திறன்மிக்க, கரடுமுரடான சூழ்நிலையில் பயணிக்கக்கூடிய, இலகுரக இரட்டைப்பொறிகொண்ட விமானமாகும்.

**10.தில்லியில் உள்ள முகர்பா சௌக்குக்கு கேப்டன் விக்ரம் பத்ராவின் பெயர் சூட்டப்படவுள்ளது. அவர், எந்தப் போரில் உயிரிழந்த இந்திய இராணுவ வீரராவார்?**




அ. 1962 சீன – இந்தியப் போர்

ஆ. 1947 இந்திய – பாகிஸ்தான் போர்

**இ. கார்கில் போர் ☑**

ஈ. வங்கதேச விடுதலைப்போர்

- தில்லி அரசின் பெயரிடும் குழு, தில்லி பிரகதி மைதான் மெட்ரோ நிலையத்தின் பெயரை, சுப்ரீம் கோர்ட் மெட்ரோ இரயில்நிலையம் என மாற்றுவதற்குப் பரிந்துரைசெய்துள்ளது. மேலும், கார்கில் போரில் உயிரிழந்த இந்திய இராணுவ வீரர் விக்ரம் பத்ராவின் நினைவாக முகர்பா சௌக், முகர்பா சௌக் மேம்பாலம் ஆகியவற்றுக்கு அவரின் பெயர் சூட்டப்படவுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.அணுவுலைகள் & மையங்களுக்கு எதிரான தாக்குதலை தடைசெய்வதற்கான ஒப்பந்தம், 1988ஆம் ஆண்டில் எந்த இருநாடுகளுக்கும் இடையே கையெழுத்தானது?**



அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் சோவியத் ரஷ்யா


ஆ. சோவியத் ரஷ்யா மற்றும் சீனா

**இ. இந்தியா மற்றும் பாகிஸ்தான் ☑**

ஈ. இந்தியா மற்றும் சோவியத் ரஷ்யா

- ❖ ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி.1 அன்று, இந்தியாவும் பாகிஸ்தானும் அணுவாற்றல் நிறுவல்கள் மற்றும் வசதிகளுக்கு எதிரான தாக்குதலை தடைசெய்வதற்காக 1988ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி தங்களின் அணுவாற்றல் நிறுவல்களின் பட்டியலை பரிமாறிக்கொள்கின்றன. இந்த ஒப்பந்தமானது, இருநாடுகளிலும் உள்ள அணுவாற்றல் நிலையங்களை ஒருவருக்கொருவர் தாக்கிக் கொள்வதிலிருந்து தடைசெய்கிறது.

**2. 2022இல் செயல்படுத்தப்படவுள்ள ககன்யான் திட்டத்துக்காக, இரஷ்யாவில் மேற்கொள்ளப்படவுள்ள பயிற்சிக்கு, இந்தியாவின் எந்த அமைப்பைச் சேர்ந்த நான்கு இந்தியர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்?**



அ. இந்திய விண்வெளி ஆய்வுமையம்

**ஆ. இந்திய வான்படை ☑**

இ. மார்கோஸ்

ஈ. இந்திய கடற்படை

- ❖ மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் இந்தியாவின் முதல் திட்டமான ககன்யான் திட்டத்துக்காக, அண்மையில், இந்திய விமானப்படையைச்சேர்ந்த 4 ஆண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள், இரஷ்யாவில் விண்வெளி வீரர்களுக்கான பயிற்சியை மேற்கொள்வார்கள்.
- ❖ 'ககன்யான்' என்பது முழுமையான தன்னாட்சிகொண்ட 3.7 டன் எடையுள்ள விண்கலமாகும். இது, மூன்று பேர் சுற்றுப்பாதைக்குச் சென்று புவிக்கு திரும்பக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் குறைந்தபட்சம் 7 நாட்கள் வரை சுற்றுப்பாதையில் இருக்கும்.

**3.காலநிலை நெருக்கடியைச்சமாளிப்பதற்கு புதிய தீர்வுகளைக் கொண்டுவருவோரை ஊக்குவிக்கும் நோக்கில் "எர்த்ஷாட் பரிசு" என்றவொன்றை அறிமுகப்படுத்தவுள்ளவர் யார்?**



**அ. கேம்பிரிட்ஜின் கோமகன் ☑**

ஆ. இரண்டாம் எலிசபெத் இராணி

இ. சசக்ஸின் கோமகன்

ஈ. இளவரசர் வேல்ஸ்

- கேம்பிரிட்ஜின் கோமகனான (Duke of Cambridge) இளவரசர் வில்லியம், 'Earthshot' எனப்படும் சுற்றுச் சூழல் பரிசை அறிமுகப்படுத்தவுள்ளார். 2021 முதல் அதற்கடுத்துவரும் 10 ஆண்டுகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் 5 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பல மில்லியன் பவுண்டுகள் மதிப்பிலான விருது வழங்கப்படும். எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் உலகின் மிகப்பெரிய சிக்கலான காலநிலை நெருக்கடியைக் கையாளுவதற்கு குறைந்தது 50 தீர்வுகளையாவது பெறுவதே இதன் நோக்கமாகும்.

**4.அண்மையில் உருவாக்கப்பட்ட சைன்யா கர்த்தா விபாக்கின் தலைவர் யார்?**

அ. பிரதமர்

ஆ. பாதுகாப்பு அமைச்சர்

இ. நிதியமைச்சர்

**ஈ. பாதுகாப்புப்படைத்தலைவர் ☑**



- 'சைன்யா கர்த்தா விபாக்' என்றழைக்கப்படும் புதிய இராணுவ விவகாரத்துறையானது பாதுகாப்புப் படைத்தலைவரால் தலைமைதாங்கப்படும். ஏற்கனவேயுள்ள பாதுகாப்புத் துறை, பாதுகாப்பு உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் மேம்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலத்துறை உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சகத்தின் மற்ற நான்கு துறைகளோடு தற்போது இந்தத் துறை கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது.

**5.அண்மையில், பவழப்பாறைகளுக்கு தீங்குவிளைவிக்கும் சூரியவொளி காப்புப் பூச்சை (Sun–Screen) தடைசெய்த நாடு எது?**

அ. ஆஸ்திரேலியா

ஆ. நியூசிலாந்து

**இ. பலாவு ☑**

ஈ. நௌரு



- பவழப்பாறைகளுக்கு தீங்குவிளைவிக்கும் சூரியவொளி காப்புப் பூச்சை, பலாவு தடைசெய்துள்ளது. பெரும்பாலான சூரியவொளி காப்புப்பூச்சுகளில் காணப்படும் வேதிப்பொருட்கள் பவழப்பாறைகளுக்கு தீங்கு விளைவிப்பவையாக உள்ளன என்று அறிவியல் சான்றுகள் பகர்கின்றன. எனவே, புத்தாண்டு நாளிலிருந்து, பலாவு நாட்டில் இறக்குமதி செய்யப்படும் / விற்கப்படும் எந்தவொரு பவழப்பாறைகளுக்கு தீங்குவிளைவிக்கும் சூரியவொளி காப்புப் பூச்சுகளும் பறிமுதல் செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல் அதன் உரிமையாளருக்கு அபராதமும் விதிக்கப்படும்.

**6. Daesh'க்கு எதிரான சர்வதேச கூட்டணியில் ஐக்கிய அமெரிக்க நாடுகள் வகித்த பங்கை, ஐக்கிய அரபு அமீரகம், அண்மையில் பாராட்டியது. Daesh'இன் வேறுபெயர் என்ன?**

அ. அல் கொய்தா

ஆ. ஹெஸ்பொல்லா

**இ. ISIS ☑**

ஈ. ஹௌதிக்கள்



❖ பிராந்தியத்தில் தனது நலன்களையும் படைகளையும் பாதுகாப்பதற்காக ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) தனது ஆதரவை வெளிப்படுத்தியதோடு, Daesh (ISIS)'க்கு எதிரான சர்வதேச கூட்டணியில் அமெரிக்காவின் பங்கையும் பாராட்டியது. 'Daesh' என்ற சொல் அல்–தவ்லா அல்–இசுலாமியா அல்–ஈராக் அல்–ஷாம் (இசுலாமிய அரசு – ஈராக்) என்ற அரபு சொற்றொடரின் சுருக்கமாகும்.

**7. 2020 புத்தாண்டு மற்றும் புதிய தசாப்தத்தின் தொடக்கத்தைக் கொண்டாடிய உலகின் முதல் பெரிய நகரம் எது?**

அ. சிட்னி

**ஆ. ஆக்லாந்து ☑**

இ. கிறிஸ்ட்சர்ச்

ஈ. வெலிங்டன்



❖ 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தைக் கொண்டாடும் உலகின் முதல் பெரிய நகரமாக நியூசிலாந்தின் ஆக்லாந்து மாறியுள்ளது. ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தைத் தொடர்ந்து ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆசியா ஆகியவை 2020ஆம் ஆண்டை வரவேற்றன. காட்டுத்தீ பாதிப்பு இருந்தபோதிலும் ஆஸ்திரேலியாவின் சிட்னியில், வாணவேடிக்கை நிகழ்வுடன் புத்தாண்டு தொடங்கியது.

**8.கிருஷி கர்மான் விருதின்மூலம் விவசாயத்தின் எந்த அம்சத்தில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது?**

அ. விநியோகம்

ஆ. விற்பனை

**இ. உற்பத்தி ☑**

ஈ. நீர் மேலாண்மை



❖ ஜன.2, 3 ஆகிய தேதிகளில் கர்நாடகாவுக்கு பிரதமர் மோடி விஜயம் செய்யவுள்ளார். முந்தைய பயிரிடு பருவங்களில், பல்வேறு பிரிவுகளில் நல்ல விவசாய உற்பத்தியை பதிவுசெய்த 21 மாநிலங்களுக்கு அவர் கிருஷி கர்மான் விருதை அப்போது வழங்குவார். 21 மாநிலங்களுள், தமிழ்நாடும் ஒன்றென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**9.அண்மையில் உருவாக்கப்பட்ட அகில பாரதீய குஜராத்தி சமாஜ் சங்கலன் சமிதியின் நோக்கம் என்ன?**

அ. மாநிலத்தின் வளர்ச்சி செயல்பாட்டில் நாடுகடந்த இந்தியர்களை சேர்க்க

**ஆ. மாநிலத்தின் வளர்ச்சி செயல்பாட்டில் குஜராத்தில் வசிக்காதோரை சேர்க்க ☑**

இ. மாநிலத்தின் வளர்ச்சி செயல்பாட்டில் இந்திய வம்சாவளியினரைச் சேர்க்க

ஈ. மாநிலத்தின் வளர்ச்சி செயல்பாட்டில் குஜராத்திற்கு வெளியேயுள்ள பிற இந்தியர்களை சேர்க்க

❖ முதலமைச்சரை தலைமைப் புரவலராகவும், குஜராத்துக்கு வெளியே வாழும் குஜராத்திகளுக்கான அமைச்சகத்தின் அமைச்சரை தலைவராகவும் கொண்டுள்ள அகில பாரதீய குஜராத்தி சமாஜ் சங்கலன் சமிதி, மாநிலத்திற்கு வெளியே வாழும் குஜராத்திகளை மாநிலத்தின் வளர்ச்சி செயல்பாட்டில் சேர்க்க

நோக்கம் கொண்டுள்ளது. குஜராத்தில் ஒருமுறையும், பிற மாநிலத்தில் ஒருமுறையும் என ஆண்டுக்கு இருமுறை இந்தச் சமிதி கூடும்.

**10.டோனி வைட்டனின் பெயரால் அழைக்கப்பெறும் *Landouria tonywhitteni* என்பது என்ன?**

**அ. நத்தை ☑**

ஆ. வெட்டுக்கிளி

இ. பாம்பு

ஈ. வண்டு



❖ டோனி வைட்டன் ஒரு பிரிட்டிஷ் சுற்றுச்சூழல் பாதுகாவலராவார்; அவர், சைக்கிள் விபத்து காரணமாக இறப்பதற்கு முன்பு ஆசியாவின் பல்லுயிர் தன்மையை ஆவணப்படுத்தினார். அவர் மரணித்த பிறகு அவரது பெயரில் ஒரு பரிசு நிறுவப்பட்டது. அண்மையில், அந்தப்பரிசை வென்றவர்களுள் ஒருவர், இந்தோனேசியாவில் அவரின் பெயரை ஒரு நத்தை இனத்துக்குச் சூட்டினார். இந்த வகை நத்தை இனங்கள் சுண்ணாம்புக் கற்கள் நிறைந்த இடங்களில் வாழ்கின்றன.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் அதிக விளைச்சலை பெற்ற தமிழ்நாட்டுக்கு "சிறந்த வேளாண் தொழிலாளர்" விருதை பிரதமர் மோடி வழங்கினார். தமிழ்நாட்டுக்கு ஐந்தாவது முறையாக இந்த விருது அளிக்கப்படுகிறது. 2017–18ஆம் ஆண்டில் ஹெக்டேருக்கு 2,729 கிலோ உற்பத்தித்திறனுடன் 10.382 இலட்சம் டன் எண்ணெய் வித்துகளை தமிழ்நாடு உற்பத்திசெய்திருந்தது. மேலும், எண்ணெய் வித்து உற்பத்தியில் அதிக மகசூலை தந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு விவசாயிகளுக்கும் "வளர்ச்சிசார் விவசாயிகள்" விருது அளிக்கப்பட்டது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.ஜனவரி 2, 2020 அன்று, எந்தச் சீக்கிய குருவின் பிறந்தநாள் 'பிரகாஷ் பர்வ்' எனக்கொண்டாடப்பட்டது?**



அ. குரு ஹர்கிரிஷன் சாகிப்

ஆ. குரு ஹர் ராய்

**இ. குரு கோபிந்த் சிங் ☑**

ஈ. குரு தேஜ் பகதூர்

❖ பத்தாவது சீக்கிய குருவான குரு கோபிந்த் சிங்கின் பிறந்தநாள் 2020 ஜன.2 அன்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. ஒரு சீக்கிய குருவின் பிறந்தநாள் "பிரகாஷ் பர்வ்" என்றும் அழைக்கப்படுகிறது.

❖ பாரம்பரிய சீக்கிய நாட்காட்டியின்படி (நானாக்ஷாஹி), குரு கோபிந்த் சிங்கின் பிறந்தநாள் இந்த ஆண்டு ஜன.2 (கிரிகோரியன் நாட்காட்டியின்படி அவர், 1666 ஜன.5 அன்று பிறந்தபோதிலும்) அன்று வருகிறது. 9ஆவது குருவும் குரு கோபிந்த் சிங்கின் தந்தையுமான குரு தேஜ் பகதூர் கொல்லப்பட்டதை அடுத்து, குரு கோபிந்த் சிங் தனது ஒன்பதாவது வயதில் பத்தாவது சீக்கிய குருவாக நியமிக்கப்பட்டார்.

**2. 2019-2020 நிதியாண்டின் முதல் பாதியில், இந்தியாவில், அதிக அந்நிய நேரடி முதலீட்டை (FDI) செய்துள்ள நாடு எது?**



அ. ஐக்கிய அரபு அமீரகம்

ஆ. சுவிச்சர்லாந்து

**இ. சிங்கப்பூர் ☑**

ஈ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

❖ அண்மையில் வெளியிடப்பட்ட அரசாங்க தரவுகளின்படி, 2019-2020 நிதியாண்டின் முதல் பாதியில், $8 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்நிய நேரடி முதலீடுகளுடன் (Foreign Direct Investment) இந்தியாவில் அதிகமான முதலீடுகளை மேற்கொண்ட நாடாக சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது. அதைத்தொடர்ந்து, மொரிசியஸ் நாட்டிலிருந்து $6.36 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்நிய நேரடி முதலீடுகள் இந்தியாவுக்குள் வந்துள்ளன.

❖ சிங்கப்பூர் மற்றும் மொரிசியசைத் தொடர்ந்து அமெரிக்கா, நெதர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன. நிலக்கரி சுரங்க மற்றும் ஒப்பந்த உற்பத்தியில் அந்நிய நேரடி முதலீடு வரம்புகள் சமீபத்தில் அரசாங்கத்தால் தளர்த்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

**3. SSLV'க்காக ISRO தனது இரண்டாவது ஏவுதளத்தை தமிழ்நாட்டில் அமைக்கவுள்ளது. SSLV என்பது எதன் சுருக்கமாகும்?**



அ. Space Satellite Launch Vehicle

ஆ. Speed Satellite Launch Vehicle

**இ. Small Satellite Launch Vehicle ☑**

ஈ. Solar Satellite Launch Vehicle

❖ இந்திய விண்வெளி ஆய்வு மையம் தனது இரண்டாவது ஏவுதளத்தை தென் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைக்கவுள்ளது. ஏவுதள மையத்தை நிர்மாணிப்பதற்கு கிட்டத்தட்ட 2300 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரசு வழங்கவுள்ளது.

❖ தொடக்கத்தில் சிறியரக ஏவுகலங்கள் (Small Satellite Launch Vehicle – **SSLV**) இங்கிருந்து விண்ணுக்கு செலுத்தப்படும். எதிர்வரும் காலத்தில் இந்த ஏவுதளத்தின் பணிகள் விரிவாக்கப்படலாம். இச்சிறியரக ஏவுகலங்கள் 500 கிலோ வரையிலான எடையை விண்ணுக்குச் சுமந்துசெல்ல பயன்படுத்தப்படும். 2020ஆம் ஆண்டின் முதல்பாதியில் இந்த ஏவுதளம் பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4. ISRO அறிவிப்பின்படி, புதிய சந்திரயான்–3 திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு என்ன?**

**அ. ₹600 கோடி ☑**

ஆ. ₹500 கோடி

இ. ₹400 கோடி

ஈ. ₹300 கோடி



❖ சந்திரயான்–3 திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்துக்கான மதிப்பிடப்பட்ட செலவு ₹600 கோடிக்கு மேல் இருக்கும் என ISRO தலைவர் K சிவன் அறிவித்துள்ளார். அவரது அறிக்கையின்படி, இத்திட்டத்தைச் செயல்படுத்த 16 மாதங்கள் தேவைப்படும். எனவே, சந்திரயான்–3 திட்டமானது இந்த ஆண்டின் இறுதியிலோ அல்லது எதிர்வரும் 2021ஆம் ஆண்டின் தொடக்கத்திலோ செயல்படுத்தப்படும்.

**5. 2020ஆம் ஆண்டின் முதல் செயற்கைக்கோளாக 2020 ஜன.17 அன்று விண்ணில் ஏவப்படவுள்ள செயற்கைக்கோள் எது?**

**அ. GSAT – 30 ☑**

ஆ. GSAT – 29

இ. GSAT – 17

ஈ. GSAT – 11



❖ Ariane–5ECA ஏவுகணையின் மூலம் வரும் ஜன.17 அன்று பிரெஞ்சு கயானாவில் உள்ள கௌரௌ விண்வெளி மையத்திலிருந்து கனரக தகவல் தொடர்பு செயற்கைக்கோளான GSAT 30ஐ இந்தியா ஏவவுள்ளதாக ISRO தலைவர் K சிவன் அறிவித்துள்ளார். இது, 2020ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் செயற்கைக்கோளாகும். அரசாங்கம் மற்றும் தனியார் சேவைவழங்குநர்களுக்கு தகவல்தொடர்பு இணைப்புகளை வழங்கும் திறனை இது அதிகரிக்கும்.

**6.அண்மையில், இரயில்வே வாரியத்தின் தலைவராக மறுநியமனம் செய்யப்பட்டவர் யார்?**



**அ. வினோத் குமார் யாதவ் ☑**

ஆ. ராஜேஷ் அகர்வால்

இ. பூர்ணேந்து சேகர் மிஸ்ரா

ஈ. விஷ்வேஷ் சௌபே

❖ இரயில்வே வாரியத்தலைவராக உள்ள, வினோத் குமார் யாதவின் பதவிக்காலம், 2019 டிசம்பர்.31ஆம் தேதியுடன் முடிவடைந்தது. அவருடைய பதவிக்காலம், மேலும் ஓராண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இரயில்வேயில் பல்வேறு நிர்வாக சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, இரயில்வே வாரியத்தில், தலைமைச் செயல் அதிகாரி பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

**7. நல்ல வேளாண் உற்பத்திக்காக மாநிலங்களுக்கு வழங்கப்படும் விருதின் பெயர் என்ன?**



அ. கிருஷி சம்மன்

ஆ. கிருஷி சம்ரிதி

**இ. கிருஷி கர்மான் ☑**

ஈ. கிருஷி கீர்த்தி

❖ கர்நாடகாவில் நடைபெற்ற ஒரு விழாவின்போது கிருஷி கர்மான் விருதுகளை 21 மாநிலங்களுக்கு பிரதமர் வழங்கினார். 'கிருஷி கர்மான் – வேளாண் தொழிலாளர்' விருது என்பது உணவுதானிய உற்பத்தியில் மாநிலங்களின் முயற்சிகளை அங்கீகரிப்பதற்காக நிறுவப்பட்டது. அதிகபட்ச மொத்த உணவுதானிய உற்பத்தி மற்றும் அதிகபட்ச தனிநபர் உணவுதானிய உற்பத்தியின் அடிப்படையில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

**8.107ஆவது இந்திய அறிவியல் மாநாட்டை நடத்தவுள்ள நகரம் எது?**




அ. புது தில்லி

ஆ. லக்னோ

இ. கொல்கத்தா

**ஈ. பெங்களூரு ☑**

❖ கர்நாடக மாநிலம் பெங்களூருவில் உள்ள வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தில், ஜன.3 முதல் 7 வரை நடக்கும் 107ஆவது இந்திய அறிவியல் மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி திறந்துவைத்தார். "Science and Technology: Rural Development – அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்: கிராமப்புற வளர்ச்சி" என்பது ஐந்துநாள் நடைபெறும் இந்நிகழ்வின் கருப்பொருளாகும்.

❖ பெண்கள் அறிவியல் மாநாடு, குழந்தைகள் அறிவியல் மாநாடு, அறிவியல் தொடர்பாளர்கள் சந்திப்பு மற்றும் உழவர் அறிவியல் மாநாடு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளையும் இந்த மாநாடு நடத்தவுள்ளது.

**9.அண்மையில், இசை அகாடமியின் புகழ்பெற்ற 'சங்கீத கலாநிதி' விருதைப் பெற்றவர் யார்?**

அ. S சௌமியா ☑

ஆ. சுதா ரகுநாதன்

இ. பாம்பே ஜெயஸ்ரீ

ஈ. அருணா சாய்ராம்



❖ இசை அகாடமியால் நிறுவப்பட்ட 'சங்கீத கலாநிதி' விருதுக்கு முன்னணி கர்நாடக இசை பாடகி S சௌமியா தேர்வுசெய்யப்பட்டு அண்மையில் இவ்விருதைப்பெற்றார். தனது இசை வாழ்வில் பல்வேறு விருதுகள் மற்றும் பட்டங்களைப்பெற்றவரான S சௌமியா, இசை அகாடமியால் நடத்தப்படும் மெட்ராஸ் நவீன கர்நாடக இசைப் பள்ளியின் கௌரவ ஆசிரியையாக உள்ளார். அவர், தமிழ்நாடு இசை மற்றும் நுண்கலை பல்கலைக்கழக கல்விக்குழுமத்தின் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

**10.இந்தூரைத் தொடர்ந்து, 2020ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுவச் சர்வேக்ஷன் லீக்கில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் (முதல் காலாண்டில்) பிடித்துள்ள நகரங்கள் எவை?**

அ. அகமதாபாத் மற்றும் ஜெய்ப்பூர்

ஆ. குருகிராம் மற்றும் பெங்களூரு

இ. புனே மற்றும் புவனேஸ்வர்

ஈ. போபால் மற்றும் சூரத் ☑

❖ இந்தியாவின் தூய்மையான நகரங்கள் குறித்த சமீபத்திய பட்டியலை மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அரசு வெளியிட்டுள்ளார். இதில், பத்து இலட்சத்துக்கும் மேல் மக்கள்தொகைகொண்ட நகரங்களின் பிரிவின்கீழ், இந்தூர் முதல் & இரண்டாவது காலாண்டுகளில் முதலிடத்தில் உள்ளது.

❖ மத்தியபிரதேச மாநிலத்தின் புகழ்பெற்ற நகரமான இந்தூர் முந்தைய ஆண்டின் பட்டியலிலும் முதலிடம் பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. முதல் காலாண்டில் போபாலும் சூரத்தும், இரண்டாவது காலாண்டில் இராஜ்கோட்டும் நவி மும்பையும் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தூய்மைக்கான சர்வேயில், குறைந்த மக்கள்தொகைகொண்ட நகரங்கள் பிரிவில் தென்மண்டலத்தில் தமிழ்நாட்டில் உள்ள மேலத்திருப்பந்துருத்தி, டி.கல்லுப்பட்டி, கங்குவார்பட்டி ஆகியவை தரவரிசையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன.
    - அதேபோன்று, 25,000 முதல் 50,000 வரை மக்கள்தொகை கொண்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் முதலாவது காலாண்டுக்கான தூய்மை சர்வேயில் தமிழ்நாட்டின் சின்னமனூர் முதலிடமும், 2ஆவது காலாண்டுக்கான சர்வேயில் தமிழ்நாட்டின் திருவதிபுரம் மூன்றாமிடமும் பெற்றுள்ளது.
    - 50,000 முதல் 1 இலட்சம் மக்கள்தொகைகொண்ட நகர்ப்புற பகுதிகளில் முதலாவது காலாண்டு தூய்மைசர்வேயில் தமிழ்நாட்டின் நாமக்கல் முதலிடமும், திருவள்ளூர் மூன்றாமிடமும், 2ஆவது காலாண்டு சர்வேயில் நாமக்கல் மூன்றாமிடம் பெற்றுள்ளது.
    - அதேபோன்று, பாசறை வாரியப் பகுதிகளில் முதலாவது காலாண்டு தூய்மை சர்வேயில் தமிழ்நாட்டின் பரங்கிமலை பாசறை வாரியம் (cantonment) முதலிடம் பெற்றுள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில், எந்த அமைப்பின் 5 இளம் அறிவியலாளர்கள் ஆய்வகங்களை இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார்?**

அ. இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு, ISRO

**ஆ. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு, DRDO ☑**

இ. பாபா அணு ஆராய்ச்சி மையம், BARC

ஈ. அணுசக்தித் துறை, DAE

❖ சமீபத்தில், கர்நாடக மாநிலம் பெங்களூருவிலிருந்து பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்புக்காக DRDO இளம் அறிவியலாளர்கள் ஆய்வகங்கள் என்ற ஐந்து புதிய பாதுகாப்பு ஆய்வகங்களை திறந்து வைத்தார். பெங்களூரு, மும்பை, சென்னை, ஹைதராபாத் மற்றும் கொல்கத்தா ஆகிய ஐந்து இந்திய நகரங்களிலிருந்து இந்த ஆய்வகங்கள் இயங்கும். நம் நாட்டிற்கான புதிய & புதுமையான பாதுகாப்பு தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் இந்த ஆய்வகங்கள் தங்களது கவனத்தைச் செலுத்தும்.

**2.சமீபத்தில், 2020ஆம் ஆண்டை செயற்கை நுண்ணறிவு ஆண்டாக அறிவித்து செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சிக்காக தொழில்நுட்ப நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட மாநிலம் எது?**

அ. ஆந்திரபிரதேசம்

**ஆ. தெலுங்கானா ☑**

இ. ஒடிசா

ஈ. அஸ்ஸாம்

❖ அண்மையில், தெலுங்கானா மாநில அரசு 2020ஆம் ஆண்டை செயற்கை நுண்ணறிவு (AI) ஆண்டாக அறிவிக்கும் நிகழ்வை ஏற்பாடு செய்தது. இந்நிகழ்வில், மாநிலத்தில், செயற்கை நுண்ணறிவு (AI) ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக பல தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

❖ இந்த ஒப்பந்தங்களின்படி, பயன்பாட்டு செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மையம் மற்றும் ஆராய்ச்சி & மேம்பாட்டுப் பூங்கா விரைவில் தெலுங்கானா மாநிலத்தில் அமைக்கப்படும்.

**3.வனம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, 2019ஆம் ஆண்டில் இந்தியாவில் இறந்த புலிகளின் எண்ணிக்கை எவ்வளவு?**

**அ. 95 ☑**



ஆ. 100

இ. 105

ஈ. 110

❖ வனம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு 2019ஆம் ஆண்டில், இந்தியாவில் இறந்த புலிகளின் மொத்த எண்ணிக்கை நூறுக்கும் குறைவாக உள்ளது.

❖ கடந்த 2019ஆம் ஆண்டில், இந்தியாவில், மொத்தம் 95 புலிகள் இறந்துள்ளன. அவற்றில் 84 புலிகள் இயற்கையாகவும் 11 புலிகள் பல்வேறு காரணங்களாலும் இறந்துள்ளன. கடந்த 2018ஆம் ஆண்டில், இறந்த புலிகளின் எண்ணிக்கை மொத்தம் நூறாகவும், 2017ஆம் ஆண்டில் 115 ஆகவும் இருந்தது.

**4.அண்மையில் காலமான டேவிட் ஸ்டெர்ன், எந்தப் பிரபலமான விளையாட்டுக் கூட்டமைப்பின் ஆணையாளராக இருந்தார்?**



அ. பார்முலா 1, F1

**ஆ. தேசிய கூடைப்பந்து சங்கம், NBA ☑**

இ. மேஜர் லீக் பேஸ்பால், MLB

ஈ. தேசிய ஹாக்கி கூட்டமைப்பு, NHL

❖ கூடைப்பந்து உலகில் பிரபலமான நபரான டேவிட் ஸ்டெர்ன் சமீபத்தில் காலமானார். அவர் 1984 முதல் 2014 வரை தேசிய கூடைப்பந்து சங்கத்தின் ஆணையாளராக பணியாற்றினார். சர்வதேச அரங்கில் தேசிய கூடைப்பந்து சங்கத்தின் (NBA) நோக்கத்தை விரிவுபடுத்துவதற்கும் அதை புகழுடையதாகவும் வெற்றிகரமாகவும் மாற்றுவதில் அவர் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தார். பெண்கள் தேசிய கூடைப்பந்து சங்கம் அவரது தலைமையில் நிறுவப்பட்டதாகும்.

**5.ஓய்வுபெறுவதாக அண்மையில் அறிவித்த சுனிதா லக்ரா, எந்த விளையாட்டைச் சார்ந்த பிரபல இந்திய வீராங்கனையாவார்?**



அ. டென்னிஸ்

ஆ. பூப்பந்து

**இ. ஹாக்கி ☑**

ஈ. மட்டைப்பந்து

❖ இந்திய ஹாக்கி அணியின் முன்னாள் தலைவியும், அணியின் தடுப்பாளருமான சுனிதா லக்ரா, சமீபத்தில், முழங்கால் காயம் காரணமாக சர்வதேச ஹாக்கியிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். 2018 ஆசிய சாம்பியன்ஸ் கோப்பையில், இந்தியா, அவரது தலைமையின்கீழ் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. 2016ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக்கில் பங்கேற்ற இந்திய அணியின் ஓர் அங்கமாகவும் அவர் இருந்தார். டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்க முடியவில்லை என்றபோதிலும், சுனிதா, முழங்கால் அறுவை சிகிச்சைக்குப் பிறகு உள்நாட்டு ஹாக்கிப் போட்டிகளில் விளையாடுவார் எனக்கூறப்படுகிறது.

**6. 2020 ஜனவரி.2 முதல் வாடிக்கையாளரின் வீடுகளுக்கே சென்று மணலை வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ள மாநிலம் எது?**

அ. ஒடிசா

ஆ. மகாராஷ்டிரா

**இ. ஆந்திரபிரதேசம் ☑**

ஈ. கேரளா



❖ வாடிக்கையாளரின் வீடுகளுக்கே சென்று மணலை வழங்குவதாக ஆந்திர பிரதேச மாநில அரசு அண்மையில் அறிவித்துள்ளது. கிருஷ்ணா மாவட்டத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக தொடங்கப்படும் இந்தத் திட்டம், விரைவில் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். ஆந்திர பிரதேச மாநில கனிம மேம்பாட்டுக்கழகம், இந்த மணல் விநியோகத் திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனமாக இருக்கும்.

❖ ஆந்திர பிரதேச மாநிலம் அண்மையில் தனது புதிய மணல் கொள்கையை, கடந்த 2019 செப்டம்பரில் அறிமுகப்படுத்தியது. மேலும், சட்டத்துக்குப்புறம்பான மணல் வர்த்தகத்தைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளையும் அம்மாநில அரசு எடுத்துவருகிறது.

**7.அண்மையில் எந்த நாட்டின் அதிபராக உமரோ சிசோகோ எம்பலோ தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

அ. காம்பியா

ஆ. செனகல்

**இ. கினியா – பிஸ்ஸாவ் ☑**

ஈ. கினியா



❖ கினியா–பிசாவின் முன்னாள் பிரதமரும் இராணுவத் தலைவருமான உமரோ சிசோகோ எம்பலோ, சமீபத்தில், அந்நாட்டின் அதிபர் தேர்தலின் இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்றார். முன்னதாக நடந்த முதல் சுற்றுத்தேர்தலில் அந்நாட்டின் தற்போதைய அதிபரான ஜோஸ் மரியோ வாஸ் வெற்றிபெறத் தவறினார். உமரோ சிசோகோ எம்பலோ, ஜோஸ் மரியோ வாஸின் தலைமையில் 2016–2018 வரை பிரதமராக பணியாற்றினார். கினியா–பிசாவு என்பது மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு நாடாகும். இது, 1974ஆம் ஆண்டில், போர்ச்சுகலிடமிருந்து விடுதலை பெற்றது.

**8.அண்மையில், யாருக்கு, 'லோகமான்ய திலகர் தேசிய பத்திரிகை விருது' வழங்கப்பட்டது?**

அ. ராவிஷ் குமார்

ஆ. அர்னாப் கோஸ்வாமி

இ. சேகர் குப்தா

**ஈ. சஞ்சய் குப்தா ☑**



❖ முன்னணி ஹிந்தி நாளிதழான 'ஜக்ரன்' தலைமை ஆசிரியரான சஞ்சய் குப்தாவுக்கு, அண்மையில், 'லோக்மான்ய திலகர் தேசிய பத்திரிகை விருது' வழங்கப்பட்டது. பத்திரிகைத்துறையில் தனிநபர்கள் ஆற்றும் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் நோக்கில், புனேவைச் சேர்ந்த கேசரி–மராத்தா அறக்கட்டளை

இந்த விருதை நிறுவியது. பிரபல விடுதலைப்போராட்ட வீரர் லோக்மான்ய திலகாரால் தொடங்கப்பட்ட 'கேசரி' நாளிதழின் தொடக்கநாளை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வின்போது அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

**9.அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட, இந்திய இரயில்வேயின் புதிய ஒருங்கிணைந்த உதவிமைய எண் (integrated helpline number) என்ன?**

அ. 139 ☑

ஆ. 138

இ. 156

ஈ. 123

❖ இரயில் பயணிகளுக்கான உதவிமைய எண் (helpline) '139' என ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. எனினும் இரயில்வே பாதுகாப்புப் படைக்கான அவசர உதவி அழைப்பு தொலைபேசி எண் '182' எனத் தொடரும் என்றும் இந்திய இரயில்வே அறிவித்துள்ளது. '139' என்னும் உதவி எண்ணில் பயணிகள் அழைத்தால், 12 மொழிகளில் IVRS மொழியில் தங்களுக்குத் தேவையான உதவிகளைக் கேட்கலாம். அலைபேசி மட்டுமல்லாது, எவ்விதமான தொலைபேசியில் இருந்தும் இந்த உதவி எண்ணை அழைத்து பயணிகள் உதவி கோரலாம்.

**10.பிரதமர்–கிசான் திட்டத்தின்கீழ், தகுதியான விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் நிதி உதவி எவ்வளவு?**



அ. ₹6,000 ☑

ஆ. ₹5,000

இ. ₹10,000

ஈ. ₹8,000

❖ பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதித்திட்டத்தின் மூன்றாவது தவணை, கர்நாடகாவின் தும்குருவில் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கிவைக்கப்பட்டது. இதன்மூலம் கிட்டத்தட்ட ஆறு கோடி பயனாளிகள் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தகுதிவாய்ந்த விவசாயிகளுக்கு நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ₹2,000 வீதம் ஆண்டுக்கு ₹6,000 நிதியுதவி வழங்குவதற்காக பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதித்திட்டம் கடந்த 2019 பிப்ரவரி மாதம் பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.அமெரிக்க வான்வழித்தாக்குதலில் கொல்லப்பட்ட காசிம் சுலைமானி (Qassim Soleimani), எந்த நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்தார்?**

அ. ஈராக்

**ஆ. ஈரான் ☑**

இ. இஸ்ரேல்

ஈ. சிரியா



❖ ஈரானின் சக்திவாய்ந்த இராணுவத்தளபதியான ஜெனரல் காசிம் சுலைமானி, அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார். பாக்தாத் வானூர்தி நிலையம் அருகே ஈரான் இராணுவ வீரர்கள் பயணித்த வாகனங்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்த அமெரிக்க அதிபர் உத்தரவிட்டதாக கூறப்படுகிறது. மற்றொரு தளபதியும் சுலைமானியின் ஆலோசகருமான அபு மஹ்தி அல் முஹந்திசும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டார். காசிம் சுலைமானி, இசுலாமிய புரட்சிகர காவல்படையின் குட்ஸ் படையின் தளபதியாக இருந்தார்.

**2.மானவ் தாக்கர், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவராவார்?**

அ. பூப்பந்து

ஆ. டென்னிஸ்

**இ. டேபிள் டென்னிஸ் ☑**

ஈ. ஸ்குவாஷ்




❖ டேபிள் டென்னிஸ் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர் மற்றும் வீராங்கனைங்களுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பு (ITTF) வெளியிட்டது. இதில் 21 வயதுக்குட்பட்ட ஆடவர் ஒற்றையர் பிரிவு தரவரிசையில் இந்தியாவின் மனவ் தாக்கர், முதலிடத்தை பிடித்துள்ளார். தவிர, 21 வயதுக்குட்பட்டோர் ஒற்றையர் பிரிவு தரவரிசையில் முதலிடம் பிடித்த நான்காவது இந்திய வீரராகவும் அவரானார்.

**3.உலக பிரைலி நாள் கொண்டாடப்படும் தேதி எது?**

அ. ஜனவரி 2

ஆ. ஜனவரி 3

**இ. ஜனவரி 4 ☑**

ஈ. ஜனவரி 5




❖ பார்வையிழந்தோருக்காக 'பிரைலி – Braille' முறையை கண்டறிந்த பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த பார்வையிழந்த அறிவியலாளர் லூயி பிரைலியின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜன.4 அன்று உலக பிரைலி நாள் கொண்டாடப்படுகிறது. 1809ஆம் ஆண்டு ஜன.4 அன்று வடக்குப் பிரான்சில் உள்ள கூப்விரேவில் லூயி பிரைலி பிறந்தார்.

❖ அவரது மூன்றாம் வயதில், எதிர்பாராத விதமாக அவர் தனது இரு கண்களையும் இழந்தார். இதன் விளைவாக, பார்வையற்றோர் தடவிப்பார்த்துப் படிப்பதற்கேற்ற 'பிரைலி – Braille' முறையை அவர் கண்டறிந்தார். இந்த முறையில் 1–6 புடைப்புப்புள்ளிகளையும், துளைகளையும் கொண்டு எழுதிய எழுத்துக்களை விரல்களை வைத்துத் தடவுவதன் மூலம் பார்வையற்றோர் புரிந்துகொள்வர். உலக நலவாழ்வு அமைப்பின் கூற்றுப்படி (WHO), 36 மில்லியன் மக்கள் பார்வையற்றும், 216 மில்லியன் மக்கள் மிதமான மற்றும் கடுமையான பார்வைக்குறைபாடும் உடையவர்களாக உள்ளனர்.

**4.ரைசினா உரையாடல் என்பது எந்த அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்படும் வருடாந்திர பல–தரப்பு மாநாடாகும்?**

அ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

**ஆ. வெளியுறவு அமைச்சகம் ☑**

இ. நிதி அமைச்சகம்

ஈ. பெருநிறுவன விவகார அமைச்சகம்




❖ 'ரைசினா உரையாடல்' என்பது மத்திய வெளியுறவு அமைச்சகத்தால் முன்னணி மதியுரையகமான அப்சர்வர் ஆராய்ச்சி அறக்கட்டளையுடன் இணைந்து, கடந்த 2016ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப்படுகிற ஒரு மாநாடு ஆகும். பன்னாட்டுச்சமூகம் எதிர்கொள்ளும் சவால்களைப்பற்றி விவாதிப்ப –தற்காக, அனைத்து துறைசார்ந்த பல்வேறு தலைவர்களை இந்த மாநாடு ஒருங்கிணைக்கிறது.

❖ 'Navigating the Alpha Century' என்பது ஜன.14–16 வரை புது தில்லியில் நடைபெறவுள்ள இந்த ஆண்டு (2020) மாநாட்டுக்கான கருப்பொருளாகும். இந்த மாநாட்டின் முக்கிய பேச்சாளராக இருப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ஆஸ்திரேலிய பிரதமர், அண்மையில் அந்நாட்டில் ஏற்பட்ட கடுமையான காட்டுத்தீ விபத்தின் காரணமாக தனது வருகையை இரத்து செய்தார்.

**5. பாடோலா சேலைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, காதி மற்றும் கிராமப்புற தொழிற்சாலைகள் ஆணையத்தின் முதல் பட்டு பதப்படுத்தும் தொழிற்சாலை எந்த மாநிலத்தில் அமைக்கப்படவுள்ளது?**

அ. மகாராஷ்டிரா

**ஆ. குஜராத் ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. மத்தியபிரதேசம்



❖ காதி & கிராமப்புற தொழிற்சாலைகள் ஆணையமானது (KVIC) குஜராத் மாநிலத்தின் சுரேந்திரநகர் மாவட்டத்தில், தனது முதல் பட்டு பதப்படுத்தும் தொழிற்சாலையை திறந்துவைத்தது. படோலா என்பது குஜராத்தின் வணிகக்குறியுடைய சேலை வகையாகும். மிகவுயர்ந்த விலையைக்கொண்டிருப்பதால் இது ஓர் அரச உடையாக கருதப்படுகிறது. குஜராத்தில் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் இல்லாததே இதன் அதிக விலைக்குக் காரணமாகும்.

- சேலை நெசவு செய்யத் தேவையான பட்டுநூல் பொதுவாக பிற மாநிலங்களிலிருந்து வாங்கப்படுகிறது. KVIC அமைத்துள்ள இந்தப் புதிய ஆலை, பட்டு நூலின் விலையை குறைத்து படோலா சேலைகளின் உற்பத்தியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**6.எந்த மாநிலத்தின் போக்குவரத்துத்துறை, அண்மையில், பெண்களுக்காக 'தாமினி' என்ற உதவிமைய எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது?**




அ. ஒடிசா

ஆ. மகாராஷ்டிரா

**இ. உத்தரபிரதேசம் ☑**

ஈ. கேரளா

- சாலைப்போக்குவரத்தில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில், உத்தரபிரதேச மாநில சாலைப்போக்குவரத்துக் கழகம் (UPSRTC) பெண்களுக்காக 'தாமினி–Damini' என்ற பிரத்தேயகமான உதவிமைய எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள '81142 – 77777' என்ற எண், அழைப்பு மற்றும் வாட்ஸ்அப் சேவை என இரண்டையும் கொண்டிருக்கும்.

- நாள்தோறும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும் இந்த உதவிமைய எண்ணை, UPSRTCஇன் தலைமையகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் பணிபுரியும் பெண் அதிகாரிகள் கையாளுவார்கள். மத்திய அரசின் 'நிர்பயா திட்ட'த்தின் ஒருபகுதியாக இது தொடங்கப்பட்டுள்ளது.

**7.பவழப்பாறைகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு தீங்குவிளைவிக்கும் நச்சுத்தன்மைமிக்க சூரியவொளி காப்புப்பூச்சுகளை தடைசெய்துள்ள முதல் நாடு எது?**



**அ. பலாவு ☑**

ஆ. பிலிப்பைன்ஸ்

இ. தைவான்

ஈ. பப்புவா நியூ கினி

- மேற்கு பசிபிக் பெருங்கடலில் உள்ள ஒரு சிறிய தீவு நாடான பலாவு, பவழப்பாறைகள் மற்றும் பிற நீர்வாழ் உயிரினங்களை பாதிக்கும் வேதிகள் அடங்கிய சூரியவொளி காப்புப்பூச்சுகளுக்கு (sunscreen) தடைவிதித்துள்ளது. UNESCO'இன் உலக பாரம்பரிய தளமாக விளங்கும் அதன் ராக் தீவுகளில் உள்ள தெற்கு கடற்கரைக்காயல்களை பாதுகாப்பதற்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், ஆக்ஸிபென்சோன் உள்ளிட்ட நச்சுவேதிகள்கொண்ட சூரியவொளி காப்புப்பூச்சுகளை அந்நாட்டில் பயன்படுத்தவோ விற்கவோ இனி அனுமதிக்கப்படாது.

**8.நடப்பாண்டின் (2020) இந்திய காவலர் ஜூடோ கிளஸ்டர் சாம்பியன்ஷிப்பை வழங்கும் இந்திய நகரம் எது?**




அ. கௌகாத்தி ஆ. கட்டாக்

**இ. புது தில்லி ☑** ஈ. கோவா

❖ அகில இந்திய காவலர் ஜூடோ கிளஸ்டர் சாம்பியன்ஷிப்பின் நான்காவது பதிப்பை, புது தில்லியில், மத்திய சேமக்காவல்படை நடத்துகிறது. இந்நிகழ்வு 2020 ஜன.4 முதல் 7 வரை நடைபெறும். நாடு முழுவதுமிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் இந்தப்போட்டியில் பங்கேற்கின்றனர். இந்நிகழ்வை உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் தொடங்கிவைத்தார். சாம்பியன்ஷிப்பின் முந்தைய பதிப்பை ஒடிசா மாநில காவல்துறை ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**9.தேசிய பேரிடர் மீட்புப்படை அகாடமி நிறுவப்படவுள்ள நகரம் எது?**

அ. முசோரி

ஆ. டேராடூன்

**இ. நாக்பூர் ☑**

ஈ. ஹைதராபாத்

❖ மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவால், அண்மையில், தேசிய பேரிடர் மீட்புப்படை அகாடமிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. நாக்பூரைச் சேர்ந்த தேசிய தீயணைப்புக் கல்லூரியின் வளாகத்தையும் அவர் அப்போது திறந்துவைத்தார். இந்த அகாடமி, பேரிடர்களை உருவக –ப்படுத்துவதற்கும், பல்வேறு மீட்பு நடவடிக்கைகளில் பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்குமான அதிநவீன உட்கட்டமைப்பைக்கொண்டிருக்கும். பேரிடர் மீட்பு தொடர்புடைய நடவடிக்கைகளுக்கான அர்ப்பணிப்பு ஆற்றலாக விளங்கும் தேசிய பேரிடர் மீட்புப்படை, 2006ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

**10.அண்மையில் காலமான ரத்னா ஓஜா, எந்த மாநிலத்தைச் சேர்ந்த நாடகக்கலைஞரும் ஆர்வலருமாக இருந்தார்?**



அ. ஒடிசா

ஆ. மேகாலயா

**இ. அஸ்ஸாம் ☑**

ஈ. மேற்கு வங்கம்

❖ மூத்த நாடகக்கலைஞரும் அஸ்ஸாமைச் சேர்ந்த சமூக ஆர்வலருமான ரத்னா ஓஜா கௌகாத்தியில் காலமானார். மாநிலத்தின் நாடக இயக்கத்தை புதுப்பிப்பதில் அவர் ஒரு கருவியாகப் பங்குவகித்தார். குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிரானது உட்பட நாட்டின் பல சமூகம்சார்ந்த பிரச்சனைகளில் ஆர்ப்பாட்டங்களில் அவர் தீவிரமாக பங்கேற்று உரையாற்றியுள்ளார். நாடகக்கலைக்கு அவராற்றிய பெரும் பங்களிப்புக்காக, அஸ்ஸாம் மாநில அரசால் அவருக்கு 'நடாசூர்யா விருது' வழங்கப்பட்டது.

## நடப்பு நிகழ்வுகள்

**1. DRDO'இல், ஏரோநாட்டிகல் சிஸ்டம்ஸின் தலைமை இயக்குநராக உள்ள இந்தியாவின் 'ஏவுகணை பெண்மணி' யார்?**



அ. Dr.டெஸ்ஸி தாமஸ் ☑

ஆ. ரிது கரிதால்

இ. முத்தையா வனிதா

ஈ. அனுராதா T K

❖ பெங்களூரில் நடைபெற்ற பெண்கள் அறிவியல் மாநாட்டின் முதன்மை விருந்தினராக, புகழ்பெற்ற இந்திய அறிவியலாளரும், ஏரோநாட்டிகல் சிஸ்டம்ஸின் தலைமை இயக்குநருமான Dr.டெஸ்ஸி தாமஸ் கலந்துகொண்டார். இது, தற்போது நடைபெற்று வரும் 107ஆவது இந்திய அறிவியல் மாநாட்டின் ஒரு பகுதியாகும். இந்தியாவின் அக்னி–IV ஏவுகணை திட்டத்தின் இயக்குநராக அவர் பணியாற்றியதன் மூலம், இந்தியாவில், ஓர் ஏவுகணைத் திட்டத்திற்கு தலைமைதாங்கிய முதல் பெண் அறிவியலாளராக Dr.டெஸ்ஸி தாமஸ் ஆனார்.

**2.நங்கனா சாகிப் குருத்வாரா அமைந்துள்ள நாடு எது?**



அ. இந்தியா

ஆ. பாகிஸ்தான் ☑

இ. நேபாளம்

ஈ. பூடான்

❖ பாகிஸ்தானில் லாகூர் அருகே நங்கனா சாகிப் நகரத்தில் அமைந்துள்ள நங்கனா சாகிப் குருத்வாரா, மிகவும் புகழ்மிக்க ஒரு குருத்வாரா ஆகும். முதல் சீக்கிய குரு பிறந்து சீக்கிய மதத்தைப் போதித்ததாக நம்பப்படுகிற இவ்விடத்தில் இந்தக் குருத்வாரா கட்டப்பட்டுள்ளது. இது, ஜனம் அஸ்தான் குருத்வாரா என்றும் அழைக்கப்படுகிறது. அண்மையில் இந்தக் குருத்வாராவில் நடந்த கடுமையான தாக்குதல் சம்பவத்தின் காரணமாக இது அண்மைச்செய்திகளில் இடம்பெறுகிறது.

**3.சமீபத்தில், அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்த பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**




அ. இர்பான் பதான் ☑

ஆ. யூசுப் பதான்

இ. புவனேஷ் குமார்

ஈ. R அஸ்வின்

❖ அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களிலிருந்து ஓய்வுபெறுவதாக இந்திய கிரிக்கெட் வீரர் இர்பான் பதான் அறிவித்துள்ளார். பத்தொன்பது வயதில் இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற்று, ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 2003ஆம் ஆண்டில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இர்பான் பதான்

அறிமுகமானார். 16 ஆண்டுகால தொழிற்முறை கிரிக்கெட் வாழ்வில், டெஸ்ட் போட்டியின் முதல் ஓவரில் ஹாட்ரிக் விக்கெட் எடுத்தது உட்பட பல சாதனைகளை அவர் படைத்தார். 2007ஆம் ஆண்டு T20 உலகக்கோப்பையை வென்ற இந்திய அணியின் ஒருபகுதியாகவும் இர்பான் பதான் இருந்தார்.

**4.கீழ்க்கண்டவற்றுள், அண்மையில், ஆஸ்திரேலியாவில் பல உயிர்கள் பலியாகவும் பேரழிவுக்கும் காரணமாக இருந்தது எது?**

அ. பெருவெள்ளம்

ஆ. சூறாவளி

**இ. காட்டுத்தீ ☑**

ஈ. ஆழிப்பேரலை



❖ அண்மையில் கடுமையான காட்டுத்தீ பாதிப்பை ஆஸ்திரேலியா கண்டது. இதன் காரணமாக கிட்டத்தட்ட 25 பேர் இறந்துள்ளனர். மேலும், பல்வேறு மக்கள் தங்களின் வீடுகளை இழந்துள்ளனர். நியூ சௌத் வேல்ஸ், விக்டோரியா கடற்கரையையொட்டிய பகுதிகளில் காட்டுத்தீ தொடர்ந்து பரவி வருகிறது. காட்டுத்தீயின் தீவிரத்தால் பல மில்லியன் விலங்குகளும் இறந்துள்ளதாக கூறப்படுகிறது. புவி வெப்பமடைதலே இக்காட்டுத்தீக்கு காரணம் என அறிவியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**5.நன்னீர் ஆமைகளுக்கான நாட்டின் முதல் மறுவாழ்வு மையம் அமையவுள்ள மாநிலம் எது?**

அ. மத்தியபிரதேசம்

**ஆ. பீகார் ☑**

இ. சத்தீஸ்கர்

ஈ. ஒடிசா



❖ பீகார் மாநிலம் பாகல்பூர் வனப்பகுதியில், நன்னீர் ஆமைகளுக்கான இந்தியாவின் முதல் மறுவாழ்வு மையம் அமையவுள்ளது. விரைவில் திறக்கப்படவுள்ள இந்த மையத்தில் ஒரே நேரத்தில் 500 நன்னீர் ஆமைகள் வரை பராமரிக்க இயலும். கங்கையாற்றின் அருகே அமைந்துள்ள இவ்வனப்பகுதி, நன்னீர் ஆமைகளுக்கு சரியான இனப்பெருக்கம் செய்யும் இடமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

❖ கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டு, துன்புறுத்தப்படும் நன்னீர் ஆமைகள், இந்த மறுவாழ்வு மையத்தின் குழுவினரால் மீட்கப்பட்டு அவைகளுக்கு சரியான சிகிச்சை அளிக்கப்படும்.

**6.சூரிய பூங்காக்களை நிறுவுவதற்காக இந்தியாவிடமிருந்து $75 மில்லியன் டாலர் கடன் பெற்றுள்ள நாடு எது?**

அ. அர்ஜென்டினா

ஆ. சிலி

**இ. கியூபா ☑**

ஈ. பிரேசில்



- ❖ சூரிய பூங்காக்களை நிறுவுவதற்கு நிதியளிப்பதற்காக இந்தியா தனது எக்ஸிம் வங்கி மூலம் கியூபா நாட்டுக்கு $75 மில்லியன் டாலர் கடனை வழங்கியுள்ளது. இந்திய ஏற்றுமதி–இறக்குமதி வங்கி (EXIM) மற்றும் கியூப அரசாங்கத்தின் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனமான பாங்கோ எக்ஸ்டீரியர் டி கியூபா இடையே கடந்த ஆண்டு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

- ❖ இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், கிட்டத்தட்ட ₹500 கோடி நிதியை எக்ஸிம் வங்கி வழங்குகிறது. இந்தக் கடனுதவிமூலம், அடுத்த ஐந்தாண்டுகளில் 75 மெகாவாட் (MW) திறன்மிக்க சூரிய பூங்காக்கள் கியூபாவில் நிறுவப்படும்.

**7. FASTag'களை விற்பனை செய்வதற்காக அண்மையில் எந்த வங்கியுடன் பொது சேவை மையம் (Common Service Centre) கூட்டிணைந்துள்ளது?**

அ. ஏர்டெல் பேமெண்ட்ஸ் வங்கி

**ஆ. Paytm பேமெண்ட்ஸ் வங்கி ☑**

இ. பாரத ஸ்டேட் வங்கி

ஈ. ஈக்விடாஸ் வங்கி

- ❖ FASTag எனப்படும் டிஜிட்டல் சுங்கச்சாவடி கட்டணச் சீட்டை விற்பனை செய்வதற்காக பொது சேவை மையமானது அண்மையில் Paytm பேமெண்ட்ஸ் வங்கியுடனான (PPBL) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. PPBL FASTag'களை விற்பதற்காக, பொது சேவை மையம் அதன் தளத்தை அவ்வங்கியுடன் ஒருங்கிணைக்கும். கடந்த ஆண்டு (2019) டிசம்பர் முதல் அனைத்து வாகனங்களிலும் டிஜிட்டல் சுங்கச்சாவடி கட்டணச் சீட்டுகள் ஒட்டப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

- ❖ பொது சேவை மையங்கள் அதன் கிராமப்புற அளவிலான நிறுவனங்கள் மூலம் FASTag'களை விற்று வருகின்றன. இதற்கு முன்னர், FASTag'களை விற்பனை செய்வதற்காக பாரத ஸ்டேட் வங்கி (SBI), ஈக்விடாஸ் வங்கி மற்றும் HDFC வங்கி ஆகியவற்றுடன் பொது சேவை மையம் கூட்டிணைந்தது.

**8.ஏழைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சையை வழங்கும் திட்டமான, 'ஆரோக்கியஸ்ரீ திட்டம்' எந்த மாநிலத்தின் முதன்மைத் திட்டமாகும்?**

அ. தமிழ்நாடு

**ஆ. ஆந்திரபிரதேசம் ☑**


இ. கேரளா

ஈ. தெலுங்கானா

- ❖ 'ஆரோக்கியஸ்ரீ திட்டம்' என்பது ஆந்திரபிரதேச மாநிலத்தின் முதன்மைத்திட்டமாகும். ஏழைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சையை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். Dr. YSR ஆரோக்கியஸ்ரீ திட்டம் என்று பெயரிடப்பட்ட இத்திட்டத்தின்கீழ், ஆண்டுக்கு ₹5 இலட்சம் வரை வருமான வரம்புடைய குடும்பத்தினர் பயன்பெறுவர்.

- ❖ இத்திட்டத்தின்கீழ், பொதுமக்களுக்கு QR குறியீடுகளுடன் கூடிய அட்டைகள் வழங்கப்படும். அதனை, ரூபாய் ஆயிரத்துக்கு மேல் சிகிச்சை செலவு வரும்போது பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். இத் திட்டத்தின் கீழ், பல மீச்சிறப்பு மருத்துவமனைகள் சேர்க்கப்படவுள்ளன. மேலும், பல்வேறு மருந்துகள் மாநில அரசால் நடத்தப்பெறும் மருத்துவமனைகளில் கிடைக்கப்பெறும்.

**9.கோல்டன் குளோப் விருதுகள் 2020இல் 'சிறந்த திரைப்படம் – நாடகம்' விருதை வென்ற படம் எது?**




அ. ஒன்ஸ் அபான் எ டைம் ஹாலிவுட்

**ஆ. 1917 ☑**

இ. பாராசைட்

ஈ. மிஸ்ஸிங் லிங்க்

❖ '1917' என்ற தலைப்பில் வெளியான திரைப்படம், அண்மையில் அறிவிக்கப்பட்ட கோல்டன் குளோப் விருதுகள் 2020இல் 'சிறந்த திரைப்படம்–நாடகம்' விருதைப்பெற்றது. 2019 டிசம்பரில் வெளியிடப்பட்ட இந்தத்திரைப்படத்தை சாம் மெண்டிஸ் இணைந்து எழுதி இயக்கியுள்ளார். அவருக்கு 'சிறந்த இயக்குநர்' விருது வழங்கப்பட்டுள்ளது. 1917ஆம் ஆண்டில் நடந்த முதலாம் உலகப்போரையும், இரண்டு பிரிட்டிஷ் வீரர்களையும் அடிப்படையாகக்கொண்டது இந்தப்படம். ஜார்ஜ் மெக்கே மற்றும் டீன்–சார்லஸ் சாப்மேன் ஆகியோர் இப்படத்தின் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

**10.கோல்டன் குளோப் விருதுகள் 2020இல் 'சிறந்த நடிகர்' விருதை வென்ற பிரபல நடிகர் யார்?**



அ. ஜார்ஜ் மெக்கே

ஆ. டீன் – சார்லஸ் சாப்மேன்

**இ. ஹாக்கின் பீனிக்ஸ் ☑**

ஈ. பிராட் பிட்

❖ கோல்டன் குளோப் விருதுகள் 2020இல் 'சிறந்த நடிகர்' விருதை அமெரிக்க நடிகர் ஹாக்கின் பீனிக்ஸ் வென்றுள்ளார். 'ஜோக்கர்' திரைப்படத்தில் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியமைக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. நான்கு பிரிவுகளின்கீழ் பரிந்துரைக்கப்பட்ட 'ஜோக்கர்' திரைப்படம், 'சிறந்த நடிகர் (நாடகம்)' மற்றும் 'சிறந்த அசல் இசை' ஆகிய இரு பிரிவுகளின்கீழ் விருதுகளை வென்றது. டோட் பிலிப்ஸ் இயக்கிய பரபரப்பு நிறைந்த ஓர் உளவியல் திரைப்படந்தான் 'ஜோக்கர்'. கடந்த அக்டோபரில் வெளியிடப்பட்ட இந்தத் திரைப்படம் உலகளவில் வசூல் சாதனை புரிந்தது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்த பங்களிப்பாளர்களுக்கு தேசிய வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தேசிய வடிவமைப்பு விருதுகள் வழங்கப்பட்டன. இதில் விருதுபெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் :– பெண் அறிவியலாளர்களுக்கான 'சுமன் சர்மா' விருது, DRDOஇன் வளங்கள் – மேலாண்மை பொது இயக்குநர் அறிவியலாளர் சித்ரா இராஜகோபாலுக்கு வழங்கப்பட்டது. பொது இயக்குநர் பதவிவகிக்கும் முதல் தமிழ்ப்பெண் இவரென்பது குறிப்பிடத்தக்கது.

- சுற்றுச்சூழல் பொறியியலுக்கான வடிவமைப்பு விருது சி.அனந்தராமகிருஷ்ணனுக்கு வழங்கப்பட்டது. இவர் தஞ்சாவூரிலுள்ள இந்திய உணவு பதப்படுத்தல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநராக உள்ளார்.